**வணக்கம்**

**ஆல் இண்டியா ரேடியோ-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர்:கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்**

**தேதி 22.03.2023** **நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச்செய்திகள்*

- **தொலைத் தொடர்பு தொழில்நுட்பத்தில், உலகின் மிகப் பெரிய ஏற்றுமதி நாடாக இந்தியா மேம்பட்டு வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.**

- **ஹைதராபாத்தில், குடியரசுத் தலைவர் நிலையத்தை பொது மக்களின் பார்வைக்காக, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.**

- **கோவை, மற்றும், மஹாராஷ்டிரா மாநிலத்தின் சாம்பாஜி நகரில், மத்திய அரசு ஊழியர்களுக்கான CGHS நலவாழ்வு மையங்களை, மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்வியா இன்று, காணொலி மூலம் தொடக்கி வைத்தார்.**

- **இன்று யுகாதி திருநாளை ஒட்டி, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

---

மோடி-புதுமையாக்கம் 1 (18)

**கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வரை தொலைத் தொடர்பு தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் நாடாக மட்டுமே இருந்து வந்த இந்தியா, தொலைத் தொடர்பு தொழில்நுட்பத்தில், உலகின் மிகப் பெரிய ஏற்றுமதி நாடாக மேம்பட்டு வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.**

இன்று புதுடெல்லியில் சர்வதேச தொலைத் தொடர்பு சங்கத்தின் மண்டல அலுவலகத்தையும் இந்தியாவில் அதன் புதுமையாக்க மையத்தையும், தொடக்கி வைத்தும் பேசினார். தற்போது 5ஜி தொலைத் தொடர்பு தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை, உலகிலேயே மிக அதிக வேகத்தில் விரிவுபடுத்தி வரும் நாடாக இந்தியா திகழ்வதாகவும் தெரிவித்தார். இந்தியாவில் 5ஜி தொலைத் தொடர்பு சேவைகள், வெறும் 120 நாட்களில், 125 நகரங்களில் தொடக்கப் பட்டதையும், தற்போது இந்த சேவைகள், சுமார் 350 மாவட்டங்களை எட்டி இருப்பைதயும் அவர் சுட்டிக் காட்டினார். 5ஜி சேவைகள் தொடங்கிய 6 மாதங்களுக்கு உள்ளாகவே, நாட்டில் 6ஜி சேவைகள் பற்றிய விவாதங்கள் தொடங்கி இருப்பது, இந்தியாவின் தன்னம்பிக்கைக்கு எடுத்துக்காட்டு என்று அவர் குறிப்பிட்டார். வரவிருக்கும் நாட்களில் நாட்டில் 100 புதிய 5ஜி ஆய்வகங்கள் அமைக்கப்படும் என்றும், மக்களின் தேவைகளுக்கு ஏற்ற 5ஜி உபகரணங்களை வடிவமைக்க இதனால் ஏதுவாகும் என்றும் அவர் தெரிவித்தார். இந்தியாவில் தற்போது 100



கோடிக்கும் மேற்பட்ட மொபைல் தொலைபேசி இணைப்புகள் இருப்பதாகவும், உலகிலேயே தொலைத் தொடர்பு இணைப்பு அதிகம் உள்ள நாடாக இந்தியா திகழ்வதாகவும் பிரதமர் தெரிவித்தார். இந்தியாவில் ஸ்மார்ட் தொலைபேசிகள் மற்றும் டேட்டா திட்டங்கள் குறைந்த விலையில் கிடைப்பதே, புரட்சிகரமான இந்த மாற்றத்திற்கு காரணம் என்று அவர் கூறினார். நாட்டில் மாதந்தோறும், 800 கோடிக்கும் மேற்பட்ட டிஜிட்டல் பணப் பரிவர்த்தனைகள், யுபிஐ பணப் பரிமாற்ற வசதி

**மூலம் மேற்கொள்ளப் படுவதாகவும், ஒவ்வொரு நாளும் 7 கோடிக்கும் மேற்பட்டவர்களின் அடையாளம், பல்வேறு தேவைகளுக்காக, டிஜிட்டல் முறையில் அங்கீகரிக்கப் படுவதாகவும் பிரதமர் கூறினார். ஜன்தன் திட்டத்தின் கீழ், இந்தியாவில் புதிதாக தொடக்கப்பட்ட வங்கி கணக்குகளின் எண்ணிக்கை, அமெரிக்காவின் மொத்த மக்கள் தொகையை விட, அதிகம் என்றும் அவர் கூறினார். 2014ஆம் ஆண்டுக்கு முன்பு வரை இந்தியாவில் 60 மில்லியனாக இருந்த அகன்ற அலைவரிசை இணைப்புகளின் எண்ணிக்கை, தற்போது, 800 மில்லியன் என்னும் அளவை தாண்டி அதிகரித்து இருப்பதாகவும், இன்டர்நெட் பயன்பாடு நகரங்களை விட, கிராமங்களில் தான் அதிகம் இருப்பது, டிஜிட்டல் சக்தி கிராமப்புற மக்களை சென்றடைந்து வருவதற்கு**

*மோடி-புதுமையாக்கம்* 3 (5)

**சான்றாகும் என்றும் பிரதமர் தெரிவித்தார். மத்திய தகவல் தொடர்பு அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், தகவல் தொடர்புத் துறை இணையமைச்சர் திரு. தேவு சிங் சவுகான், சர்வதேச தொலைத் தொடர்ப சங்கத்தின் தலைமைச் செயலர் திருமதி. டோரின் போக்டான் மார்ட்டின் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.**

---

*மன்கீபாத்* (14)

**பிரதமர் திரு. நரேந்திர மோடியின் மன் கீ பாத் நிகழ்ச்சி, அடுத்த மாதம், 100ஆவது பதிப்பை எட்டுவதை முன்னிட்டு, அகில இந்திய**

வானொலி, இதுவரையிலான மன் கீ பாத் நிகழ்ச்சிகளில் இருந்து, நாட்டைப் புதிய பாதையில் இட்டுச் சென்ற, பிரதமரின் முக்கிய கருத்துக்களை, நாள்தோறும் வழங்கி வருகிறது.

மனித குலத்தை ஒருங்கிணைப்பதிலும், உலக அளவில் மக்களுக்கு இடையிலான தொடர்புகளை வலுப்படுத்துவதிலும், கடலுக்கு முக்கிய பங்கு உண்டு. நிலமும், நில எல்லைகளும் மனிதர்களை பிரிக்கின்ற போதிலும், கடல் மட்டுமே, மனிதர்களை ஒருங்கிணைக்கிறது. இரு கடல்கள் சேரும் போது ஒரே பெருங்கடலாய் மாறிவிடுகிறது. ஆயினும், எல்லையற்ற கடல் பரப்பின் அலாதியான இந்த குணம் குறித்து, நம்மில் பலர் எண்ணிப் பார்ப்பதில்லை. இதை நமக்கு உணர்த்தும் வகையில், கலாச்சாரங்களை ஒருங்கிணைப்பதில் கடலின் முக்கிய பங்கு குறித்து, கடந்த 2016ஆம் ஆண்டு ஜனவரி மாத மன் கீ பாத் நிகழ்ச்சியில், பிரதமர் திரு. நரேந்திர மோடி பேசியதில் இருந்து ஒருபகுதி

---

*பிரதமர் – வாழ்த்து* (5)

நவ் சம்வத்சர் புத்தாண்டையொட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுகுறித்து பிரதமர் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், இந்த புது வருடம் நாட்டு மக்கள் அனைவருக்கும் புது புது வாய்ப்புகளை கொண்டு வருவதோடு, நமது இந்திய நாடு புதிய உச்சங்களை எட்டட்டும், இதுவே தமது விருப்பம் என்று தெரிவித்துள்ளார்.

---------------------------------------------

*திரௌபதிமுர்மு 1 (16)*

**ஹைதராபாத்தில், குடியரசுத் தலைவர் நிலையத்தை பொது மக்களின் பார்வைக்காக, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். ஜெய்ஹிந்த் தளத்தின் புனரமைப்பு மற்றும் பாதுகாப்பு பணி, மற்றும், அங்குள்ள வரலாற்று சிறப்புமிக்க கொடி கம்பத்தின் நிர்மானப் பணிக்கும் அவர் அடிக்கல் நாட்டினார். இந்த குடியரசுத் தலைவர் நிலையம் அனைத்து இந்தியர்களையும் சார்ந்தது என்றும் அவர் கூறினார். நமது சுதந்திர போராட்டம் தொடர்புடைய வீரர்களை அனைத்து குடிமக்களும் அறிந்து கொள்வது நமது கடமை என்று கூறிய அவர், இந்த கண்ணோட்டத்துடன் குடியரசுத் தலைவர் மாளிகை மற்றும் நிலையம் தொடர்பான தகவல்கள் அறியப்படாத சுதந்திர போராட்ட வீரர்கள் குறித்து விளக்கும் அறிவுக் கூடம் குடியரசுத் தலைவர் மாளிகையில் ஏற்படுத்தப் பட்டதாக, தெரிவித்தார். குழந்தைகள், இளைஞர்கள் உட்பட அனைவரும் இந்த நிலையத்திற்கு சென்று பார்வையிடுமாறு குடியரசுத் தலைவர் வலியுறுத்தினார். குடியரசுத் தலைவரின் தென் பகுதி தங்கும் இடத்தை தவிர, பொது மக்கள் பார்வைக்காக ஆண்டுதோறும் குடியரசுத் தலைவர் நிலையம் திறக்கப்படும்.**

*திரௌபதிமுர்மு 2 (4)*

**முன்னதாக, நிகழ்ச்சியின் திறப்பு விழாவில் தெலங்கானா ஆளுநர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன், மத்திய கலாச்சாரம், சுற்றுலா மற்றும் வடகிழக்கு பிராந்தியத் துறை அமைச்சர் திரு. கிஷண் ரெட்டி, தெலங்கானா உள்துறை அமைச்சர் திரு. முகமது மஹ்மூத் அலி, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.**

---------------------------------------------

*சுகாதாரமையம்* 1 (15)

**சமுதாயங்களுக்கு சுகாதார சேவையை நெருக்கமாகவும், எளிதாகவும், வழங்க வேண்டும் என்ற பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலை நோக்கு பார்வைக்கு ஏற்ப, தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் மற்றும் மஹாராஷ்டிரா மாநிலத்தின் சாம்பாஜி நகரில் CGHS எனும் மத்திய அரசு சுகாதாரத் திட்டத்தின் நலவாழ்வு மையங்களை மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா காணொலி மூலம் தொடக்கி வைத்தார்.**

**தமிழ்நாடு, மஹாராஷ்டிரா மாநில மக்களுக்கு சிறந்த மருத்துவ வசதிகளை வழங்கும் முக்கிய பங்கை இந்த 2 மையங்களும் ஆற்றும் என தெரிவித்த அமைச்சர், அரசு ஊழியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் அவர்களை சார்ந்து இருப்பவர்கள் நலனை கருத்தில் கொண்டு, தரமான சுகாதார சேவைகளை வழங்குவது மத்திய அரசின் பொருப்பாகும் என்று தெரிவித்தார்.**

**கடந்த சில ஆண்டுகளாக மத்திய அரசின் சுகாதார சேவையில், பல்வேறு மாற்றங்கள் உட்படுத்தப்பட்ட நிலையில், தற்போது டிஜிட்டல் முறையில் மருத்துவ சேவைகள் வழங்கப்படுவதாக கூறிய அமைச்சர், நாட்டு மக்களுக்கு மலிவான விலையில் தரமான மருந்துகள் கிடைப்பதை உறுதி**

*சுகாதாரமையம்* 2 (6)

**செய்யும் வகையில், நாடு முழுவதும் 9ஆயிரத்து 100 மலிவு விலை மக்கள் மருந்தகங்கள் அமைக்கப்பட்டு இருப்பதாகவும் தெரிவித்தார். இந்த**

**நிகழ்ச்சியில், மத்திய சுகாதாரத் துறை இணையமைச்சர் டாக்டர் பாரதி பிரவீன் பவார், கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பி.ஆர் நடராஜன், கோயம்புத்தூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திருமதி வானதி ஶ்ரீனிவாசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். 2014ஆம் ஆண்டு 25 ஆக இருந்த மத்திய அரசின் சுகாதாரத் திட்ட மையங்களின் எண்ணிக்கை இன்று 79 ஆக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.**

**-----------------------------------------------**

*தமிழிசைவாழ்த்து* (10)

**யுகாதி திருநாளை முன்னிட்டு, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் வாழ்த்து தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் தெலுங்கு மற்றும் கன்னட மொழி பேசும் சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் எனது உளம்கனிந்த யுகாதி திருநாள் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்றும், வசந்த காலத்தின் தொடக்கத்தை குறிக்கும் இந்த யுகாதி திருநாள், அனைவரது வாழ்விலும் மகிழ்ச்சி, ஒற்றுமை மற்றும் ஆரோக்கியத்தை கொண்டு வரும் நாளாக அமைய வேண்டியும், புதிய நம்பிக்கைகளும், எதிர்பாரப்புகளும் நிறைந்த வளமான, புதிய வாழ்க்கை தொடக்கமாக இந்த புத்தாண்டு அமைய வேண்டும் என்று வாழ்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்.**

**-----------------------------------------------**

*ஆட்சியர்-பாதுகாப்பு* (10)

**புதுச்சேரியில் உள்ள குளங்கள் மற்றும் திறந்த நீர்நிலைகள் உள்ளிட்டவைகளை முழுமையாக கண்காணித்து, அசம்பாவிதம் ஏற்பாடாத வண்ணம உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்**

**என்று, வருவாய், காவல், பொதுப்பணித் துறை மற்றும் உள்ளாட்சித் துறை அதிகாரிகளுக்கு, மாவட்ட ஆட்சியர் அலுவலக செய்திக் குறிப்பு மூலம் வலியுறுத்தி உள்ளார். பள்ளிகளுக்கு கோடை விடுமுறை அளிக்கப்பட உள்ளதால், பள்ளிக் குழந்தைகள் நீர்நிலைகள் அருகே விளையாட ஆர்வம் மிக்கவர்களாக இருப்பர் என்பதனை கருத்தில் கொண்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கை அடிப்படையில் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.**

**-----------------------------------------**

வெங்கடேஷ்வர் (13)

**மத்திய அரசின் தகவல்-ஒலிபரப்பு அமைச்சகத்தின் பத்திரிக்கை தகவல் அலுவலக முதன்மை தலைமை இயக்குநராக திரு. எஸ். வெங்கடேஷ்வர் சென்னையில் இன்று பொறுப்பேற்றார். 1989ஆம் ஆண்டு தொகுப்பைச் சேர்ந்த இந்திய தகவல் பணி அதிகாரியான திரு. வெங்கடேஷ்வர், தமது 35 ஆண்டுகால பணி காலத்தில், தூர்தர்ஷன், அகில இந்திய வானொலி, பத்திரிக்கை தகவல் அலுவலகம், கள விளம்பர இயக்குநரகம் உள்ளிட்ட மத்திய அரசு நிறுவனங்களில் பல்வேறு உயர் பதவிகளை வகித்துள்ளார். ஆந்திரப்பிரதேச அரசின் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை ஆணையராகவும் அவர் பணியாற்றி உள்ளார். இதற்கு முன்னர் பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் தென்மண்டல தலைமை இயக்குநராகவும் பதவி வகித்த போது, தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, ஆந்திரப்பிரதேசம், தெலங்கான, லட்சத் தீவு, அந்தமான் நிக்கோபார் மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள அமைச்சகத்தின் அலுவலகங்களில் தலைமை பொறுப்பு வகித்துள்ளார்.**

**-----------------------------------------**

தண்ணீர்தினம் (17)

**இன்று உலக நீர்வள தினம். நீரை கொண்டாடவும், உலக அளவில், பாதுகாப்பான குடிநீரை அணுக முடியாமல் தவிக்கும் 2 பில்லியன் மக்களின் விழிப்புணர்வை மேம்படுத்தும் வகையில், ஐநா சபையால் அறிவிக்கப்பட்ட உலக நீர்வள தினம், 1993ஆம் ஆண்டு முதல் கொண்டாடப் படுகிறது. 2030ஆம் ஆண்டிற்குள் உலக அளவில் எட்டப்பட வேண்டிய ஐநா மன்றத்தின் நிலையான வளர்ச்சி இலக்குகளில், அனைவருக்கும் குடிநீர் மற்றும் துப்புரவு என்னும் 6ஆவது இலக்கை எட்டுவதற்கான முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையில் இந்நாள் கொண்டாடப் படுகிறது.**

**பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையில், ஜல்ஜீவன் திட்டம், பிரதான் மந்திரி கிரிஷி சின்சயி யோஜனா, நமாமி கங்கே, நீர் ஆதாரம் பற்றிய தேசிய வரைபடம் மற்றும் நிர்வாகத் திட்டம் உள்ளிட்ட திட்டங்கள், நீர் சேமிப்பு மற்றும் நிலத்தடி நீர் மேம்பாட்டிற்காக செயல்படுத்தப் படுகிறது. 2023ஆம் ஆண்டு மார்ச் 21ஆம் தேதி வரை 11.49 கோடி வீடுகளுக்கு குழாய் மூலம் நீர் இணைப்புகள் வழங்கப் பட்டுள்ளதோடு, 1.53 லட்சம் கிராமங்கள் ஹர்கர் ஜல் திட்டத்தின் கீழ் கொண்டுவரப் பட்டுள்ளன. 2014ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல், நாட்டின் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 11 கோடிக்கும் அதிகமான கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.**

---

விமானம்நிலையம்-கார்பன் (17)

**விமான நிலையங்களில் கார்பன் உமிழ்வை குறைக்கும் நடவடிக்கைகளை மத்திய விமானப் போக்குவரத்துத் துறை தீவிரப்படுத்தி உள்ளது. சமீபகாலங்களில் இந்திய விமான போக்குவரத்துத் துறையின் அபரிமித வளர்ச்சி காரணமாக, விமான நிலையங்களில் கார்பன் உமிழ்வு கணிசமாக அதிகரித்துள்ளது. விமான நிலையங்களில் கார்பன் வாயு உமிழ்வை குறைக்க உதவும் சூரிய சக்தி ஆலைகள் மூலம் மின் தேவையை பூர்த்தி செய்தல், அதி நவீன தொழில்நுட்ப வசதிகளை உருவாக்குதல், பசுமை கட்டட விதிகளின்படி, கட்டடங்களை அமைத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு நீடித்த வளர்ச்சியை உறுதி செய்ய மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகம் முனைந்துள்ளது. இதுவரை ஜம்மு, ஸ்ரீநகர், புனே, புதுச்சேரி, சிம்லா உள்ளிட்ட 25 விமான நிலையங்கள் 100 சதவிகித புதுப்பிக்கதக்க எரிசக்தியில் இயங்கும் விமான நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன.**

**சென்னை, கோவை, மதுரை, திருச்சி உள்ளிட்ட 12 விமான நிலையங்களை இந்த ஆண்டு ஜூன் மாத இறுதிக்குள்ளும், சூரத், கோவா, அயோத்தி உள்ளிட்ட 46 விமான நிலையங்களை அடுத்து ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் 100 சதவிகித புதுப்பிக்கதக்க எரிசக்தியில் இயங்கும் விமான நிலையங்களாக மாற்ற இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.**

---

*மீண்டும் தலைப்புச்செய்திகள்*

**தொலைத் தொடர்பு தொழில்நுட்பத்தில், உலகின் மிகப் பெரிய ஏற்றுமதி நாடாக இந்தியா மேம்பட்டு வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.**

**ஹைதராபாத்தில், குடியரசுத் தலைவர் நிலையத்தை பொது மக்களின் பார்வைக்காக, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.**

**கோவை, மற்றும், மஹாராஷ்டிரா மாநிலத்தின் சாம்பாஜி நகரில், மத்திய அரசு ஊழியர்களுக்கான CGHS நலவாழ்வு மையங்களை, மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்வியா இன்று, காணொலி மூலம் தொடக்கி வைத்தார்.**

**இன்று யுகாதி திருநாளை ஒட்டி, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

---